# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்திவெளியீட்டு எண். 22/2022 நாள். 01..04.2022

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு, போட்டித் தேர்வுக்கான செயல்பாடுகளை முழுமையாகவும் வெளிப்படையாகவும் நடைபெறுவதற்கான முறைகளைக் கண்டறிய இராஜஸ்தான் மாநில அரசு நியமித்துள்ள சிறப்புக்குழுவின் தலைவர் மாண்புமிகு நீதியரசர் விஜய்குமார் வியாஸ், மேனாள் நீதிபதி, இராஜஸ்தான் உயர்நீதிமன்றம், குழுவின் உறுப்பினர் திரு. மகேந்திரலால் குமாவத், IRS (ஓய்வு), மேனாள் தலைவர், இராஜஸ்தான் அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் திரு. ஜெய்சிங், அரசு இணைச் செயலாளர், பணியாளர் துறை, இராஜஸ்தான் ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு வருகை புரிந்து மாண்புமிகு தேர்வாணைய உறுப்பினர்கள் முனைவர் பி. கிருஷ்ணகுமார், திரு. ஏ.வி. பாலுசாமி, முனைவர் ச. முனியநாதன், இ.ஆ.ப (ஓய்வு), பேராசிரியர் க. ஜோதி சிவஞானம், முனைவர் க. அருள்மதி மற்றும் அருட்பணி ம.ஆரோக்கியராஜ் ஆகியோரைச் சந்தித்தனர். இந்நிகழ்வின்போது தேர்வாணைய செயலாளர் திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப. மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

Tamil Nadu Public Service Commission
Chennai-600003



இராஜஸ்தான் மாநில சிறப்புக் குழுவினருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பு, சிறப்பு, மந்தணத்தன்மை பாதுகாப்பு மற்றும் தேர்வு நடைமுறைகள் ஆகியவற்றை தேர்வாணையத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் பி. கிருஷ்ணகுமார், திரு. ஏ.வி. பாலுசாமி, முனைவர் ச. முனியநாதன், இ.ஆ.ப (ஓய்வு), பேராசிரியர் க. ஜோதி சிவஞானம், முனைவர் க. அருள்மதி மற்றும் அருட்பணி ம.ஆரோக்கியராஜ் ஆகிய அனைத்து உறுப்பினர்களும் தேர்வாணையத்தின் செயலாளர் திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப. மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப. ஆகிய அனைவரும் விளக்கிக் கூறினார்கள். இராஜஸ்தான் மாநில சிறப்புக் குழுவினருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மாண்புமிகு உறுப்பினர்களும் செயலாளரும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரும் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.

திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.,
செயலாளர்